**செய்தி வெளியீடு எண்.699** **நாள்.23.8.2008**

**உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை**

**செய்தி வெளியீடு**
**டீசல் தட்டுப்பாடு குறித்த ஆய்வுக்கூட்டம்**

பெட்ரோலியப் பொருட்கள் உள்பட நுகர்வோர் அன்றாடம் சந்திக்கக்கூடிய அனைத்து பிரச்சனைகளையும் கலந்தாய்வு செய்து தீர்வு காண உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நுகர்வோர் அமைப்புகளுடன் மாநில அளவிலான கூட்டங்கள் நடத்தப்பட்டு பிரச்சனைகள் தீர்வு காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக் கூட்டங்களுக்கு அனைத்து எண்ணெய் நிறுவனங்கள் உட்பட பல்வேறு அரசுத்துறை உயர் அலுவலர்களும் அழைக்கப்பட்டு நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகள் வழங்கும் எணணெய் நிறுவனங்கள் தொடர்பான பிரச்சனைகள் உள்ளிட்ட அனைத்து நுகர்வோர் பிரச்சனைகளும் தீர்வு காணப்படுகின்றன. அவ்வாறு குறுகிய காலத்தில் 28.12.2007, 30.03.2008 மற்றும் 26.06.2008 ஆகிய நாட்களில் மாநில அளவில் தொடர்ந்து கூட்டங்கள் நடத்தப்படும் நிலையில் மேற்படி கூட்டங்கள் கூட்டப்படுவது இல்லை என உண்மைக்கு புறம்பாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது, அது மட்டுமல்லாது மாவட்ட ஆட்சியர்கள் அனுப்பும் அறிக்கைகள், நுகர்வோர் அமைப்புகள் அனுப்பும் மனுக்கள், மற்றும் பொது மக்கள் அளிக்கக்கூடிய புகார்கள் அடிப்படையில் உடனுக்குடன் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேலும் தற்போது நிலவி வரும் டீசல் தட்டுப்பாடு குறித்து தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர், அரசு தலைமைச்செயலர் மற்றும் அரசுச் செயலாளர் மட்டத்தில் எண்ணெய் நிறுவனங்களின் உயர் அலுவலர்களுடனும், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனும்

அவ்வப்போது கூட்டங்கள் கூட்டப்பட்டு நிலையை சீர் செய்ய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சமீபத்தில் 21.08.2008 அன்றும் மேற்கண்டவாறு கூட்டம் நடத்தப்பட்டு டீசல் தட்டுப்பாட்டின் உண்மை நிலவரத்தினை தீவிரமாக ஆய்வு செய்து எரி பொருள் தேவை மிக கூடுதலாக உயர்ந்துள்ள நிலையில் கூடுதல் டீசல் வழங்கி போதுமான அளவு இருப்பில் வைக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள எண்ணெய் நிறுவனங்கள் வலியுறுத்தப்பட்டன, மேலும், மத்திய அரசுக்கும் இது தொடர்பாக துரித நடவடிக்கை எடுக்க கோரி மாநில அரசு கடிதம் அனுப்பியுள்ளது,

அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களும் மாவட்ட அளவில் பெட்ரோல் மற்றும் டீசல் வணிகத் தலங்களை தொடர்ந்து கண்காணித்து இருப்பு நிலை தட்டுப்பாடின்றி இருப்பதனை உறுதி செய்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர். எனவே தமிழகத்தில் பெட்ரோல் டீசல் இருப்பு நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு தக்க முன் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. 23,08,2008 நாளிட்ட தமிழ் ஓசை நாளிதழில் தவறான செய்தி வெளியிடப்பட்டுள்ளது என்று உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.